திருவண்ணாமலை மாநகரில் அண்ணாமலையார் மலைஅடிவாரகுடியிருப்போர் நலச்சங்க ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆலோசனைகள் வழங்கினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாநகரமேயர் நிர்மலாவேல்மாறன், ப.கார்த்திவேல்மாறன், எஸ்.பன்னீர்செல்வம், பிரியாவிஜயரங்கன், சு.ராஜாங்கம், வழக்கறிஞர்கள் அருள்குமரன், லையா இரா.கார்த்திகேயன் உட்படபலர் உள்ளனர்.



தூத்துக்குடி வடக்கு மாவட்ட சுற்றுசூழல் அணி துணை அமைப்பாளர் முத்துராமன் இல்ல திருமணவிழாவில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் தூத்துக்குடி மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்தசேகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயனின் தாயார்

ஏ.கே.எஸ்.சுப்பம்மாள் அம்மையார் நினைவேந்தல் நிகழ்ச்சி!

துணை பொதுச்செயலாளர்கள் கனிமொழி கருணாநிதி எம்.பி.-ஆ.ராசா எம்.பி. பங்கேற்பு!

திருவாரூர், செப்.1- திருவாரூர் தெற்கு மாவட்டம் சித்தமல்லியை சேர்ந்த முன்னாள் சட்ட மன்ற உறுப்பினரும் பொதுவுடமை போராளியுமான ஏ.கே.சுப்பையா அவர்களின் மனைவியும், தமிழ்நாடு அரசின் முன்னாள் சிறப்பு பிரதிநிதியும், கழக விவசாய அணி செயலாளரும் ஏ.கே.எஸ்.விஜயன் அவர்களின் தாயாருமான ஏ.கே.எஸ்.சுப்பம்மாள் அவர்கள் கடந்த *23.07.2026* அன்று மறைவெய்தினார்.

மறைவின் தகவல் அறிந்த கழக துணை பொதுச் செயலாளர்கள் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களும், முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா எம்.பி., அவர்களும் ஏ.கே.எஸ்.விஜயன் அவர்களின் சொந்த ஊரான திருவாரூர் தெற்கு மாவட்டம் சித்தமல்லியில் உள்ள அவரது இல்லத்திற்கு வந்து மறைந்த ஏ.கே.எஸ். சுப்பம்மாள் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அப்போது ஏ.கே.எஸ். சுப்பம்மாள் அவர்கள் பிரிவால் வாடும் ஏ.கே.எஸ். விஜயன் உள்ளிட்ட அவரது குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் கழக துணை பொதுசெயலாளர்கள் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களும், முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா எம்.பி., அவர்களும் தங்களது இரங்கலையும் ஆறுதலையும் அவர்களுக்கு தெரிவித்தனர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் ச.முரசொலி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் துரை. சந்திரசேகரன், மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ். கார்த்திக், நகர செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் கலைவாணி மோகன் , ஒன்றிய செயலாளர்கள் வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பாலஞானவேல், இரா. மனோகரன், உள்ளிட்ட மாநில மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளை கழக வார்டு கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பங்கேற்றனர்.

உசிலம்பட்டி அருகே

நர்சிங் படிக்க விரும்பிய சிறுமி தற்கொலை!

கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை,செப்.1

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:

உசிலம்பட்டி அருகே 16 வயது தலித் சிறுமி தற்கொலை செய்துகொண்ட சம்பவம் மிகுந்த வேதனை அளிக்கிறது.

தனது எதிர்காலம் குறித்த நம்பிக்கையுடன் பள்ளிச் சேர்க்கைக்காகச் சென்ற அந்தச் சிறுமி, அங்கு அவமானப் படுத்தப்பட்டதாகக் கூறப்படும் நிலையில், மனவேதனை

யில் அச்சிறுமி உயிரை மாய்த்துக் கொண்டதால், அவரது குடும்பம் நிலை குலைந்து போயுள்ளது.

ஒவ்வொரு குழந்தைக்கும் மரியாதையும், கண்ணியமும், பாதுகாப்பான கல்விச் சூழலும் கிடைப்பது அவர்களின் உரிமை. இது போன்ற மனவேதனைக்கு எந்தக் குழந்தையும் தள்ளப்படக் கூடாது.

இந்தச் சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தி, குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை வழங்கி, நீதி நிலை நாட்டப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தமது விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்டான்லி அரசு மருத்துவமனையில்

மருத்துவக் கழிவுகள், குப்பை தேக்கம்!

தொற்று நோய் பீதியில் நோயாளிகள்!

சென்னை,செப்.01- சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனை வளாகத்தில் மருத்துவக் கழிவுகள், குப்பை தேக்கமடைந்துள்ளதால் கடும் துர்நாற்றம் வீசுவதோடு, தொற்று நோய் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது. வண்ணாரப்பேட்டை பகுதியில் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் நாள்தோறும் உள்நோயாளிகள், புறநோயாளிகள் என ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவ பயனாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இங்கு, ஒட்டுறுப்பு, கல்லீரல், சிறுநீரக பாதிப்பு, இதயம் தொடர்பான பாதிப்புகள், எலும்பு முறிவு, நரம்பியல் துறை, கண் சிகிச்சை, பல் மருத்துவம் முழு உடல் பரிசோதனை மையம், குழந்தைகள் சிகிச்சை மையம் என பல வேறு சிகிச்சைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

இந்த மருத்துவமனையில் உயர்தர சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்தாலும், அவ்வப்போது மருத்துவமனையை சுற்றி சர்ச்சைகளும், விமர்சனங்களும் எழுந்த வண்ணம் உள்ளது. தற்போது, மருத்துவமனையின் பிணவறைக்கு அருகில் மருத்துவமனையில் உபயோகப்படுத்தப்பட்ட மருத்துவக் கழிவுகள், குப்பை போன்றவை திறந்த வெளியில் கொட்டப்பட்டு தேக்கமடைந்துள்ளது.

இவற்றை தரம் பிரித்து அகற்றப்படாமல் ஒட்டு மொத்தமாக ஒரே இடத்தில் குவித்து வைத்துள்ளதால் கடும் துர்நாற்றம் வீசுவதுடன், கொசு உற்பத்தி அதிகரித்து வருகிறது. இதனால், நோயாளிகளுக்குத் தொற்று நோய் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது.

மேலும், அந்தக் குப்பை கழிவுகளை பன்றிகள் கிளறுவதுடன், பிணவறை வரை சுற்றி திரிவதால், மருத்துவ மனை வளாகத்தில் சுகாதாரமற்ற சூழல் நிலவுகிறது. எனவே, பொதுமக்களுக்கும், நோயாளிகளுக்கும் நோய் தொற்று நோய் பாதிப்பும், சுற்றுச்சூழல் மாசு ஏற்படுத்தும் அவல நிலையில் உள்ள மருத்துவக் கழிவுகள், குப்பையை விரைந்து அகற்ற மருத்துவமனை நிர்வாகமும், சென்னை மாநகராட்சி சுகாதார அதிகாரிகளும் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும், என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளரும், தமிழ்நாடு கைப்பந்து விளையாட்டு தலைவருமான டாக்டர் பொன்.கௌதமசிகாமணி சென்னை மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற மாநில அளவில் ஆண்களுக்கான கல்லூரி அளவிலான Dawn To Dusk கைப்பந்து சாம்பியன்ஷிப் இறுதி போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

'அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்' திட்டத்தின் கீழ்

அர்ச்சகர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தல்!

சென்னை, செப்.01- 'அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்' திட்டத்தின் கீழ் அர்ச்சகர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தினார்.

சட்டப்பேரவையில் பி.கே.சேகர்பாபு பேசியதாவது:-

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் திட்டத்தின்கீழ், எங்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன், 32 நபர்கள் நியமிக்கப்பட்டார்கள். நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெறுகிறார்கள் என்பதையறிந்து, எங்கள் முதலமைச்சர் அவர்கள், ஓராயிற்றுக்கிழமையன்று அந்தத் திட்டத்தை நிறைவேற்றி, திங்கட்கிழமை நீதிமன்றத்திற்குச் செல்வதைத் தடுத்த முதல்வர் எங்கள் முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி)

அதன் பிறகு ஏன் தொடர்ந்து வழங்கவில்லை என்று பொதுப்

பணித்துறை அமைச்சர் அவர்கள் கேள்வி எழுப்பினார்கள். நல்மனம் படைத்தோர் உடனடியாக உச்சநீதிமன்றத்தை அணுகுகிறார்கள். ஆகம கமிட்டி அதற்கான தீர்ப்பு வழங்கி, எந்தெந்தத் திருக்கோயில்கள் ஆகமத்திற்குள் வருகின்றன, எந்தெந்தத் திருக்கோயில்கள் ஆகமத்திற்கு வெளியே இருக்கின்றன என்ற முடிவு தெரிந்த பிறகுதான், அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் திட்டத்தின்கீழ் அர்ச்சகர்களை நியமிக்கலாம் என்று ஒரு தீர்ப்பு வந்தது.

அதில், உயர்நீதிமன்றமே நேரடியாக இருவரை அந்த கமிட்டிக்கு தலைவராகவும், உறுப்பினராகவும் நியமிக்கிறது. அரசின் சார்பில் 3 பேர் நியமிக்கப்படுகிறார்கள். நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சருக்குத் தெரியும்; சமீபத்தில்கூட உச்சநீதிமன்றத்தில் அந்த ஆகம கமிட்டி இறுதி செய்ய வேண்டுமென்ற அந்த வழக்கு வந்தபோது, அதற்கு மேலும் 6 மாதக்காலம் வேண்டுமென்று மீண்டும் நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், அதற்காக தனியாக G.O. வெளியிட்டு, உச்ச நீதிமன்றத்திலே 3 மூத்த வழக்கறிஞர்களை நியமித்து, அந்தச் சட்டப் போராட்டத்தை ஆட்சி இருந்த வரை நடத்தினோம்;

இந்த ஆட்சிக்குப் பிறகும் அந்த சட்டப் போராட்டத்தை நாங்கள் நடத்த தயாராக இருக்கின்றோம். ஆகம கமிட்டி ஆகமம், ஆகமம் இல்லாத திருக்கோயில்களை முடிவு செய்கின்ற பொறுப்பு உங்களிடம் இருக்கின்றது. ஆகவே, எங்கள் தலைவர் கலைஞர் அவர்களும் பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றிய எங்கள் தளபதி அவர்களும் காட்டிய வழியில் இந்த அரசு செயல்பட்டு 'அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்; திட்டத்தின்கீழ் அர்ச்சகர்களை நியமிக்க நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள், உள்நோக்கம் கற்பிக்கின்ற வகையில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் வழக்கு தொடர்பாக நீதிமன்றம் குறித்து ஒரு கருத்தைச் சொன்னார். உண்மையில் சொல்கிறோம், மனசாட்சியோடு, வருத்தப்பட்டு சொல்கிறோம்.

இந்த வழக்கைப் பொறுத்தளவில் மதத்தால், இனத்தால், மொழியால் மக்களைப் பிளவுபடுத்துகின்ற சக்திகள்தான் உச்ச நீதிமன்றத்தில் தடை பெறச் சென்றதே தவிர, திராவிட இயக்க கொள்கையை, திராவிட இயக்க சித்தாந்தத்தை கொண்ட நாங்கள் அதனை முழுமையாக எதிர்த்தோம்.

இவ்வாறு பி.கே.சேகர்பாபு பேசினார்.

அரசியல் காழ்ப்புணர்ச்சியால்

தி.மு.கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினின் பாதுகாப்பைக் குறைப்பதா?

தமீமுன் அன்சாரி எம்.எல்.ஏ. கண்டனம்!

சென்னை,செப்.01- "அரசியல் காழ்ப்புணர்ச்சியால் தி.மு.கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பாதுகாப்பை குறைப்பதா?" என்று தமீமுன் அன்சாரி எம்.எல்.ஏ. கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

முன்னாள் முதல்வரும், திமுகவின் தலைவருமான அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கொடுத்து வந்த உயர் பாதுகாப்பை தமிழ்நாடு அரசு குறைத்தது ஆச்சரியம் அளிக்கிறது. இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது காழ்ப்புணர்ச்சி அரசியலின் வெளிப்பாடாகவே கருதப்படும்.

இவ்வாறு அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.